T/200/0397
0397

# …லக் கந்தரந்தாதி



நாக. பரமசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/200/039

௳

குருபாதம்

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் வழங்கிய**

# அருளாசியுரை

எமது குருநாதர், நல்லைக்குருமணியவர்களால், 'கவிஞர் திலகம்' எனப்பாராட்டப்பட்ட அன்பர், கவிஞர் நாக பரமசாமி அவர்கள், இப்போது நல்லைக்கந்தரந்தாதி பாடியுள்ளார்கள். சொற்சுவை, பொருட்சுவையுடன், நெஞ்சை நெகிழ்த்தும் பக்திச்சுவையும் இவ்வந்தாதியில் பரக்கக்காணலாம். இறைவனைப் பொருளாகக்கொண்டு, பாட எத்தனித்த புலவர்களில் பலர் நாற்பது ஐம்பது பாக்களுக்கு மேல் பாட முடியவில்லையென்று பிரலாபித்ததை நாம் அறிவோம் இவரோ நூற்றுக்குமேற்பட்ட பாக்களில் தெவிட்டாத தீந்தமிழில் தரவல்ல அருட்கவிஞர் வரிசையில் சேர்ந்துவிட்டார். அருட்பிரவாகம் பொங்கியெழ, அமைதியான ஆற்றொழுக்கில், எளியதமிழில் பாக்கள் பயணம் செய்கின்றன.

ஆங்காங்கே தமிழ்மக்களின் சமகாலப்பிரச்னைகளும் தலைதூக்கி நிற்பதை இவ்வந்தாதியில் காண்கின்றோம்.

சைவ இல்லங்கள் தோறும் பாராயணம்' செய்ய வேண்டிய கைநூல் இதுவென்று கூறவேண்டுவதில்லை, இதனைப்போன்ற பிரபந்தங்களை இவர் மேன்மேலும் வழங்கி சைவப்பணிபுரியவேண்டுமென எல்லாம்வல்ல இறையருளைச் சிந்தித்து, கவிஞர், நா. பரமசாமி, அவர்களை உளமார ஆசீர்வதித்து இந்நூலை வெளியிடுகின்றோம்!

ஓம் சாந்தி. சாந்தி. சாந்தி.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய ஸ்வாமிகள்**

நல்லை ஆதீனம்
14-8 86

பேராசிரியர், அ சண்முகதாஸ், B.A., PH. D. அவர்கள்

வழங்கிய

# அணிந்துரை.

கவிஞர் நாக. பரமசாமி அவர்களுடைய **மூத்த விநாயகர் திருவந்தாதி** அரங்கேற்றஞ்செய்யப்பட்ட பொழுது அங்கு பிரசன்னமாயிருந்த பல அன்பர்கள் இக்கவிஞரே நல்லூர்க் கந்தன்மேல் திருவந்தாதி ஒன்றும் பாடவேண்டு மென வேண்டிக்கொண்டனர், அவ்வேண்டுதலுக்கிணங்க இந் நல்லைக்கந்தரந்தாதி பாடப்பட்டுள்ளது.

**நல்லைக்கந்தரந்தாதிப்** பிரபந்தத்தின்பாட்டுத்தலைவன் "நல்லடியார் நாடும் நல்லைநாதன்" ஆகிய முருகப்பெரு மான் ஆவார். கந்தவேள்மீது கவிஞருக்குள்ள பக்தி, பாடல் கள் மூலமாகப் புலப்படுகிறது. ஆற்றொழுக்குப் போலக் கவிதைகள் தடங்கலின்றிச் செல்கின்றன. யாவரும் அவற் றைப்பொருள் விளங்கப்படிக்கக்கூடியனவாக எளிமையான சொற்கள், சொற்றொடர்கள் ஆகியவற்றினாலே பாடல்கள் அமைந்துள்ளன. நல்லூர்த்திருத்தலம் சிறியதாக அமைந் தபோதும் அதன் மூர்த்தியினுடைய கீர்த்தி மிகப்பெரியது என்பதை "மூர்த்தி சிறிதாய் ஆனாலும் கீர்த்திமிக்க முத லோனே" (79) என்று கவிஞர் கூறுகிறார். அத்தலத்திலே விற்றிருக்கும் பெருமான் அடியார்களெல்லாம் வணங்க வென்றே வாழ்கின்றான்" (53) என்கிறார்)

முருகனைப் பாடிய எந்தக் கவிஞரும் அவனுடன் சேர்த்துக் தமிழையும் தமிழரையும் பாடாதுவிட்டாரில்லை இக்கவிஞரும் அதற்கு விதிவிலக்காகவில்லை. ஆனால் இவரோ தமிழருடைய துயரினை அவர் நாட்டின் இன்னலை முருக னுக்கு முறையிடுகின்றார்.

"நாயக னேயிந் நாட்டி லுள்ள
நலிவுகள் யாவும் ஒழிந்தெமது
தாயகத் துயருந் தீர்ந்திடுதல்
தாமதப் படுதல் நியாயமதோ?" (16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் நல்லூரிலே வீற்றிருக்கும் முருகன் ''இனத்தால் தமிழர் ஆகியநம், இன்பப் புதையல் ஆவானே'' (69) என்றும் பாடுகின்றார்.

நான்மணிமாலை, திருப்பள்ளியெழுச்சி, திருவூஞ்சல் திருவந்தாதி ஆகிய பிரபந்தங்கள் பாடுவதிலே கைதேர்ந்த கவிஞராகிய திரு. நாக. பரமசாமி அம்பிகை பேரில் **நாச்சியார் அந்தாதியும்** பிள்ளையார் பேரில் **மூத்தவிநாயகர் திருவந்தாதியும்** பாடியுள்ளார், இன்று வெளிவரும் **நல்லைகந்தரந்தாதி** அடியார்கள் பாடி இன்புறவும் இறைவன் அருளைப்பெறவும் உதவவல்லது. இந்நூலின் பயனை ஆசிரியர் கவிநயத்துடன்,

''ஆறுமுகங்கள் கொண்ட பிரான்
அழகாய் நல்லை வளர்முருகன்
மாறுமுகங்கள் நீக்கி யெம்பால்
வளரும் வினைகள் போக்குபவன்''

ஆகிய கந்தனைப் பாடும் இவ்வந்தாதியைப் படித்துப் பொருள் விளங்குபவரோ பாடல்களைக் கூறுபவரோ ''குன்றா இன்பம் எய்துவரே'' எனக் கூறுகின்றார் ஈழத்துத் தமிழ்ப் பிரபந்த வரலாற்றிலும் ஈழத்துத் தமிழ்க்கவிதை வரலாற்றிலும் இந்நூல் பேசப்படுமென்பதில் ஐயமில்லை. திரு நாக. பரமசாமி அவர்களின் கவித்துவ ஆற்றலை இந்நூல் புலப்படுத்துகின்றது. கந்தனடியார்களுக்கு இது ஒரு கைநூலாக அமையுமென்பது திண்ணம்.

**பேராசிரியர், அ. சண்முகதாஸ்**

தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
திருநெல்வேலி 10 8-86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் சக்தி

# வணக்கமும் நன்றியும் !

❋ நல்லைக்கந்தரந்தாதியைப் படிக்கக்கேட்ட மாத்திரத்தே ரூபா **501/-** உவந்தளித்த **பெயர் குறிப்பிடவிரும் பாத அன்பருக்கு...**

❋ நல்லைக்கந்தரந்தாதி கையெழுத்துப்பிரதியைப்பார்வையிட்டுத்தூய்மை செய்த பேரறிஞர் **சொக்கன்** அவர்கட்கு

❋ செய்யுள்களைப் பிரதிசெய்து தந்துதவிய என்னினிய மாணவி செல்வி **பத்மலோசினிக்கு...**

❋ அருளாசியுரை வழங்கிச்சிறப்பித்தும் வெளியிட்டும் வைத்தருளிய **நல்லை ஆதீனமுதல்வர்** அவர்கள் பாத பங்கயங்களுக்கு...

❋ அணிந்துரை வழங்கிய மதிப்புக்குரிய பேராசிரியர் **அ. சண்முகதாஸ்** அவர்கட்கு...

❋ அழகும் அருமையும்பெற அச்சேற்றித்தந்த **கண்ணன் அச்சகத்தின்** அனைத்தூழியர்க்கு ..

❋ தட்டச்சிற் பொறித்துத்தந்த தம்பி திரு. **கா. பீதாம்பரனுக்கு...**

❋ எளியேனை ஆட்கொண்டருளிய **நல்லைக்குருமணியின்** பாதாரவிந்தங்களுக்கு...

அன்பன்,

நாக. பரமசாமி

15/6, புவனேஸ்வரி அம்பாள் வீதி,
நல்லூர் கிழக்கு,
யாழ்ப்பாணம்.
26-8-86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சரவணபவ.

# நல்லைக் கந்தரந்தாதி

## காப்பு.

நல்லை முருகனவன் நாச்சியரின் நற்குமரன்
வல்ல தமிழ்சொல்லும் வானவன்காண் - மல்லற்
புகழ்கூற என்னுள் புகுந்துபுன் னாவில்
திகழ்வன் கஜமுகாயன் தேர்.

## நூல்

### (அறுசீர் ஆசிரிய விருத்தம்)

அள்ளித் தருவான் அண்ணலவன்
அப்பன் முருகன் அருளையெலாம்
துள்ளித் திரியும் என்மனமே
தூயோன் காலில் வீழ்ந்துவிடு
வள்ளிக் கொடியைப் படர்நேயன்
வளர்தெய் வானை மணமகனை
உள்ளத் தாலே பிடித்திடுவாய்
உயர்நல் லூரானை யுத்தமமே! 1.

உத்தம மான மயிலுடையான்
உணர்வோ டவனை உன்னிடினே
புத்தி தெளியும் புன்னெறியிற்
போயே யலையும் போதமறும்
சித்தியுண் டாகும் சிவநெறியும்
சேரும்! செவ்வேற் பெருமானைப்
பத்திசெய் நல்லைப் பதிதனக்கே
பறந்தே வந்திடு பாருலகே. 2.

பாருல கத்தின் பராபரனைப்
பாழும் எங்கள் பவந்துடைத்துச்
சீர்பெற நல்லைப் பெரும்பதியைச்
சிறப்போ டெய்திய சேவகனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரும் அடைதற் கெளியவனை
இன்பம் அருளும் இறையவனைச்
சூர்கடி தேவனைச் சென்றடைவோம்
தொழுதே அவனடி சூடுவமே! 3.

சூடுவ மேயவன் சேவடியாம்
தூமலர்ப் பாதந் தொழுதிடுவோம்
ஆடுவ மேயடி யார்களுடன்
ஆனந்த மாக அரகரவென்
றோடுவம் நல்லைக் கோபுரங்கண்
டுள்ள முருகி யுவந்திடுவோம்
பாடுவம் சுவாமி நாதனையே
பண்ணிறை நாமம் பத்தியொடே! 4.

பத்திசெய் வோம்பாற் காவடியைப்
பணிந்தே கொண்டு பதமலரைச்
சுத்தி யுடனே நினைத்தாலே
தொல்லைச் சென்ம வல்வினைபோம்
நத்தி நிற்கும் நல்லடியார்
நாடுந் நல்லை நாதனவன்
முத்தித் தமிழைக் கற்பித்தான்
மூவாக் கோடி முனிவர்க்கே! 5.

முனிவர் சித்தர் யோகருமே
முனைந்து சென்று முழுமனதாய்க்
குனியுஞ் சேவடிக் கொழுந்துடையான்
குறத்தி வள்ளி குஞ்சரியோ
டினிதாய் நல்லை யமர்ந்துள்ளான்
ஈசன் பதமே நாடிடிலே
இனியும் பிறவி யுண்டாமோ?
இல்லை யென்றும் இன்பமதே. 6.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பம் துன்பம் எல்லாமும்
ஏழு பிறப்பும் தீண்டாமல்
அன்பர் உளத்தில் அழகாக
ஆடும் வள்ளிதெய் வானையுடன்
தென்பு தருவான் கலிதன்னைத்
தேய்த்துத் துயரம் போக்கிடுதற்
கென்றே நல்லைக் குலந்தன்னில்
எழுந்தே யருளும் இறையவனே. 7.

இறைவன் கலிவர தன்குமர
ஈசன் தன்னுடை இன்மலர்த்தாள்
முறையாய்ப் பற்றி நிற்போரின்
முந்தை வினைகள் முட்டறுமே
நறைசேர் மலத்தார் சூழ மகிழ்
நாயகன் நல்லைப் பதியினிலே
உறைவான் அவனை ஓர்ந்துநிற்போம்
உலகீர் இதனை உணர்வீரே! 8.

உணர்தற் கரிய வுத்தமனாய்,
ஓங்கும் பரனே யாயினும்நற்
குணர்கட் கெளிய னாய்மிளிர்வான்
குஞ்சரி வள்ளி யுடன்மகிழ்ந்து
புணர்வுற் றருளைப் புரிகின்ற
புகழ்சேர் நல்லைப் புரியினிலே
துணர்தாள் பணிந்து தொழுகின்றார்
தூய மனத்துத் தேவர்களே. 9.

தேவர் சிறையை விடுவித்த
செல்வத் தமிழன் தெய்வமவன்
மூவர் தமக்கும் எட்டாத
முக்கண் முனிவன் முத்திநலம்
யாவ ருக்குந் தரவென்றே
யாழ்ப்பா ணத்து நல்லையிலே
மேவி யிருந்தான் மெய்யாக
வாழும் இந்த மேதினியே. 10.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேதினி வாழ்வும் இன்றிருக்கும்
        மேலும் அதுவே வேறொருநாள்
யாதென வாகும் எங்கிருக்கும்?
        எவ்விடம் போகும் யாரறிவார்
வீதியில் மாடம் ஓங்கிநிற்கும்
        வியனகர் நல்லை வேலவன்பேர்
ஓதிநிற் பீர்கதி தேடிநிற்பீர்
        ஓடிநிற் பீரிதை ஓர்ந்திடுமே! 11.

ஓர்ந்திடின் ஞானம் தருவானாய்
        ஓம்பொருள் சொன்ன உத்தமன்றாள்
சேர்ந்திடின் நாங்கள் செய்திட்ட
        சென்ம வினைகள் செயலறுமே
நாந்தடு மாற்றம் எய்திடுதல்
        நாசம் ஆகும் நல்லைவளர்
சேந்தனை யன்றி நமக்கென்று
        தெய்வம் வேறும் உளதாமோ? 12.

வேறுள பொருள்கள் பலவிருந்தும்
        வேலா நின்றன் அருளிலையேல்
கூறும் பெருமை யுண்டாமோ?
        குமரா! நல்லைப் பதிநேசா!
சீறும் வினையின் பிடிப்பிருந்து
        செய்வ தறியேன் பவக்கடல்விட்
டேறும் வழியை எனக்குரையாய்!
        ஏந்தால் உன்னைத் தேடுவனே! 13.

தேடித் திரிவார் உலகமெலாம்
        தெருவில், மரத்தின் கீழிருப்பார்
வாடி அலைவார் உனைக்காணும்
        வாய்ப்பைப் பெறாமல் எங்கணுமே
ஓடி யலுப்பார் நல்லூரில்
        உறையும் முருகப் பெருமானே!
நாடி யுன்னை வந்தடைந்தால்
        நாளும் உன்னைப் பெறலாமே! 14.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுதற் கரிய பேறுகளைப்
பெறுதல் விரும்பிப் பூதலத்தோர்
மறுகிக் களைத்தார் நல்லூரின்
மன்னா! கையில் நெய்கொண்டு
வறிதே வெண்ணெய்க் கலைவார்போல்
வருந்திக் கிடப்பார் உன்னைவிட
உறுதிப் பொருளும் உளதாமோ?
உரையாய் வள்ளி நாயகமே! 15.

நாயக னேயிந் நாட்டிலுள
நலிவுகள் யாவும் ஒழிந்தெமது
தாயகத் துயருந் தீர்ந்திடுதல்
தாமதப் படுதல் நியாயமதோ?
வாயகத் தேயுன் நாமத்தை
வாணா ளொன்றிற் சொன்னாலே
போயக லாத பொல்லாப்பும்
உண்டோ நல்லைப் பொற்கொழுந்தே.

பொன்னில் இருக்கும் நன்னாட்டம்
பொருந்தி யுன்மேல் வைத்துவிட்டால்
மண்ணில் வாழும் மாந்தர்கள்
மதிப்பைப் பெறுதல் நிச்சயமே!
விண்ணக மொத்த நல்லையிலே
மேவி யுறையுங் கந்தா நின்
கண்ணக லாது கடைக்கணித்தல்
கலியுக வரதா போதுமன்றே. 17.

போதும் என்னும் பொன்மனது
பொல்லேன் எனக்குக் கிட்டாமல்
வேதனை கொள்வ துன்னுடைய
விழிமல ருக்கும் எட்டிலதோ?
ஓதும் நாவர் உறைவதனால்
உயரும் நல்லைப் பதியினிலே
தீதும் நல்ல துங்கடந்தே
உறையும் தெய்வச் சேவகனே! 18.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவக னேசெந் தூர்ப்பதியின்
செல்வா சூரின் வலிகொய்த
தேவர் சேனைத் தளபதியே!
தேரூர் நல்லைத் திருக்குமரா
மூவர் முதலா னோருக்கும்
மூத்த பெருமா னவர்தமக்கும்
யாவ ருக்கும் உபதேசம்
இனிதா யுரைத்த பெருமானே! 19.

பெருமா னுனது பாதங்கள்
பேரா னந்தம் தந்திடுமே
ஒருமான் வயிற்றில் உண்டாகி
உலகத் தொடர்பு கொள்ளுதற்காய்
கருமான் வள்ளிக் கொடிதன்னைக்
கருதிப் படர்ந்த கிரிவாசா!
திருமால் மருகா நல்லையிலே
திருவோ டுறையும் கதிர்வேலே! 20.

கதிரைக் காலும் சுடரொளியே
கடம்ப மலரை யணிவோனே
புதிரா முலகப் பிணிப்பதனாற்
புழுங்கி அழுங்கி வேகின்றேன்
சதுராம் வேதத் துட்பொருளே
தயவாய் நல்லைச் சந்நிதியில்
எதிரே யில்லா துறைகின்ற
எந்தாய் நலங்கள் தந்தாளே! 21.

தந்தங் கரத்தே யுடையானின்
தம்பி யாகப் பூதலத்தின்
பந்தம் பாசம் துடைக்கவெனப்
பரமன் தந்த பண்டிதனே
கந்தங் கமழும் நல்லையிலே
கர்ப்பூ ரத்தின் ஒளியினிலே
சிந்தை தெளியக் காட்சிதரும்
சேயே யென்னை யாண்டருளே! 22.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளின் திறங்கள் அறியாத
அசடன் என்னைக் கடைக்கணித்து
மருளை நீக்கி மனம்வருடி
மாயா மலங்கள் துடைக்கின்ற
பொருளே நல்லைப் பெரும்பதியின்
புண்ணிய னேயுன் சீரடியுள்
தெருளை மறந்து கிடப்பதென்றோ?
தெய்வத் தமிழின் தேசிகனே! 23.

தேசிக ஞானச் செழுஞ்சுடரே
தேவர் சேனைக் கதிபதியே
மூசிக வாகனன் சோதரனே!
மூவா மறையின் உட்பொருளே!
நாசக! மும்மல மாசுகளின்
நல்லைக் கந்தா குறவள்ளி
நாயக னேநின் அருள்சேரல்
நாயேன் எனக்குக் கிட்டாதோ? 24.

கிட்டா தானே தேவர்முதல்
கீர்த்தி மிக்க முனிவோர்க்கும்
எட்டா தானே! யாயிடினும்
இதயச் சுத்தி யுடையார்க்கு
நட்பா வானே நல்லையிலே
நாடி யுறையும் நல்லவனே
முட்பா தையிலே செலுமென்னை
முனியா தெடுத்தின் றாட்கொள்ளே!

ஆளாய்க் கொண்டிவ் வடியேனின்
அவலம் ஒழிக்கும் ஆண்டவனே
மீளா நரகம் புகுமென்னை
மீட்டுன் அடியே காட்டிடுவாய்
வேளை தோறும் அடியார்கள்
விரையும் கூடல் நல்லூரில்
வாளா நிற்க வரமருள்வாய்
வடிவேல் உன்னை மறவேனே! 26.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறவே னுனது பாதங்கள்
மாயச் சூரை மாய்ந்திட்டோய்!
நறவே சொரியும் மலர்ச்சோலை
நல்லைப் பதியின் தலைவனுனை
அறவே மறந்தேன் இதுகாறும்
அஞ்சே லென்றே அபயஞ்செய்
யிறையே! ஔவைக் கருள்செய்தாய்!
ஈசன் புல்லும் ஆண்டவனே! 27.

ஆண்டவ னுகக் கோவணத்தோ
டழகுப் பழனித் திருமலையில்
தாண்டவம் செய்த தனிப்பெருமைத்
தலைவா ஏழாம் படைதன்னை
வேண்டி நின்றே நல்லையிலே
விரும்பிக் கோயி லதுகொண்டாய்
கூண்டுக் கிளியாய்ச் சிறையுற்றேன்
கூவுங் குரலைக் கேளாயோ? 28.

கேளேன் நல்ல திருப்புகழைக்
கேட்டுஞ் சிந்தை செயகில்லேன்
வீழேன் நினது சந்நிதியில்
விரும்பி யுன்னைப் பணிசெய்யேன்
நாளும் இசைகள் ஒலிக்கின்ற
நல்லை வளரும் வேல்முருகா!
தாழேன் பிறவித் துயர்தன்னைத்
தயக்கம் தானுன் திருவுளமோ? 29.

உளமோ கல்லாய் உலையுமெனை
உதறித் தள்ளி விடுவாயேல்
வளமே யற்ற என்வாழ்வு
மகிழ்ச்சி காண்டல் எங்ஙனமோ?
நலமே சூழும் நல்லையிலே
நாளும் அருள்செய் நாயகனே
குலமே பொல்லேன் அதனாலே
குணமும் பொல்லே னுற்றவனே! 30.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றவன் நீயே உண்மையும் நீ
உணர்ந்து நின்னைத் தொழுபவராம்
கற்றவர் நெஞ்சில் கொலுவிருந்து
காக்குங் கடவுள் நீயன்றோ!
மற்றவர் என்றும் அறியாத
மாமணி யேநல் லூர்க்கரசே
உற்ற பொழுதில் ஓடிவந்தென்
உறுதுணை யாக நில்முருகா! 31.

முருகா என்றே யுனைப்பணிந்து
முனைப்பே யொழிந்து மெய்யடங்கி
உருகா நின்றென் னுளங்குழைந்தே
உயிர்க்குத் துணையே என்றிருகண்
பெருகா நிற்ப தென்றுகொலோ?
பெண்மா லிருவ ருடன்நல்லை
வருகா தலனே என்மீது
வஞ்சந் தீர்த்தல் முறையாமோ? 32.

முறைசெய் தாலும் முருகாநின்
முன்னே நின்றால் எத்துயரும்
விரைவாய் ஓடும் என்பதெலாம்
வெற்றுக் கூற்றோ? இசைத்தேனீ
அறையும் பொய்கைத் தலங்கள்சூழ்
அருமைப் பதியாம் நல்லையிலே
உறையும் பெருமான் யானுன்றன்
உடைமை யன்றோ உடையானே! 33.

உடையாள் நடுவுள் இருக்கின்ற
உய்பார் குலத்துக் கதிபதியாம்
சடையான் தந்த சரவணனே!
சதுரா மறைகள் ஒலிக்கின்ற
படையாம் நல்லை வளர்கின்ற
பரம குருவே ஆட்கொள்ளத்
தடையாய் இருக்கும் மூலவினைத்
தளையை அறுப்பாய் சண்முகனே! 34.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முக நாத! சரவணப்பூந்
தடாகத் தமர்ந்த கந்தகுகா!
உண்முக மாக எனைப்பார்க்கும்
உணர்வே வந்து கூடாதோ?
வெண்ணில வெறிக்கும் தல்லையதன்
வீதி தன்னை நண்ணிடுவேன்
திண்ணென் றழுத்தும் சுமையெல்லாம்
தீர்வதும் என்றோ கூறுயே! 35.

கூறுய்ப் பெண்ணைத் தம்முருவில்
கொண்டே யருளும் எம்பெருமான்
வீறுய்த் தந்த வேலழகா!
விழிகள் பன்னி ரண்டுடையாய்
சேறுய்ப் பழனம் பெருமழகு
சேர்க்கும் நல்லைப் பதியுடையாய்
பாறுங் கல்லாய் ஆனமனம்
பக்குவ மடைதல் எக்காலம்? 36.

எக்கா லமுமே இன்னிசையாய்
எழிலார் உன்னைச் சூழ்ந்தொலிசெய்
எக்கா ளத்தொனி நாதசுரம்
ஏற்ற முடைய தவிலொலியும்
தக்கார் இசைக்க நல்லூரைத்
தலையாம் நகராய்க் கொண்டவனே
பொக்கம் மிக்க என்னுள்ளம்
பொசுங்க நின்றன் அருள்செய்யே. 37.

செய்ய பாதந் தனைத்தந்து
சேர்த்தே ஆளும் திறமுடையாய்
ஐய! நல்லை ஆண்டவனே!
அலறுவ துன்செவிப் பட்டிலதோ?
பொய்யர் தமது கூட்டொழிந்து
பொன்னூர் தாளில் தலைவைத்து
மெய்யாய் உறங்கும் நாள்வந்து
விரைவில் என்னைச் சேராதோ? 38.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரும் அவன்றன் தாளிரண்டும்
திருவார் கரங்கள் பன்னிரண்டும்
கூரும் ஆறீர் திருவிழியும்
கொண்டே நம்மை அணைத்திடுவான்
நீரும் நிலத்து வளங்களெல்லாம்
நிறைந்த நல்லூர்ப் பதியதனில்
ஊரும் தேரில் இவர்ந்துவரும்
உத்தமன் காலைப் பிடியுமினே. 39.

பிடியை யன்ன நடையுடையாள்
பேதித் தெம்மை வளர்ப்பதற்காய்க்
கடிதாய்த் தந்த கந்தனிவன்
காத லித்தே உறைகோயில்
முடிசார் மன்னர் அரசாண்ட
மூதூர் நல்லைப் பதியிதுவாம்
விடிவு தேடும் நமரங்காள்
விரைமின் அவன்றன் சேவடியே! 40.

சேவடி யாலிம் மூவுலகைச்
சேர வளந்தான் திருமருகா!
ஆவடி யேனின் பவச்சுமைகள்
அழிய வழியே தருணகிரிப்
பாவடிக் கேநீ பயன்செய்த
பரிசின் பத்தி லொருபங்கு
தா! அடி யேற்கும் நல்லூரைத்
தலமாய்க் கொண்ட மயிலோனே! 41.

மயிலோய்! சேவற் கொடியுடையாய்
வள்ளி குஞ்சரி மணவாளா!
அயில்வேல் அரசே! உம்பர்க்கும்
அரியோய்! நல்லைப் பதியழகா!
எயிலார் புரங்கள் எரித்திட்ட
எம்பெரு மானின் திருவிழியில்
ஒயிலாய்த் தோன்றிச் சரவணத்தில்
உலகம் உய்யத் தவழ்ந்தோனே! 42.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவழும் மழலைக் கோலத்தில்
தாயர் அறுவர் முலைமுகந்து
மகிழும் கார்த்தி கேயனென
மாறு நாமந் தனைக்கொண்டான்
அகிலும் சாந்தும் மழையாய்ப்பெய்
தழைகைப் பொழியும் நல்லூரின்
முகிலைத் தொடுங்கோ புரத்துள்ளோ
முத்தி நலங்கள் தருவானே! 43.

தருவாய் நிழலைத் தருவானைத்
தருமங் காத்தே யருள்வானை
மருவாய் மலராய்த் திகழ்வானை
மணியாய் நல்லை மிளிர்வானைக்
கருமா மலங்கள் அழிப்பானைக்
கதிர்வே லுடனே திரிவானைக்
குருவாய் வந்தெம் குறைதீர்ப்பான்
குணமே யருளுங் கோமகனே! 44.

கோமான் குமரன் குவலயத்தின்
கொடுமைக் கலியைத் தீர்ப்பதற்காய்
மாமான் வள்ளிக் கொடிதன்னை
மருவிப் புணர்ந்து மகிழ்வுடனே
சீமா னாக நம்மருகே
சிறப்போ டிருக்கும் பேறுடையோம்
நாமேன் கவலைப் படவேண்டும்?
நாளும் நல்லைப் பதிசெய்வோம். 45.

செல்வந் தன்னைச் சேர்ப்பதற்காய்ச்
செய்யாக் கருமஞ் செய்தேநீ
அல்லும் பகலும் அளவற்ற
அல்லற் பட்டே அழுகின்றாய்
வெல்லும் படையைக் கைக்கொண்ட
வேந்தன் தாளில் விழுவாயேல்
நல்லூர் நாதன் வருவானே
நலங்கள் தந்து காப்பானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பான் காப்பான் அருள்செய்வான்
கருத்தோ டிந்தப் புவனத்தைப்
பூப்பான் மறைப்பான் நல்லூராம்
புனிதத் தலத்திற் குடிகொண்டான்
மூப்பாய் மூவா முதலோனும்
முன்னின் றருளும் வேலழகன்
பூப்பா தத்தில் தலைவைத்தால்
பொல்லாங் கெல்லாம் தொலையாவோ?

தொலையாப் பாவப் பிணிநம்மைத்
துரத்தும் போது நற்றாயாய்
முலையைத் தந்து தாலாட்டி
மொய்க்கும் துன்பம் ஓட்டிடுவான்
நிலையாம் நல்லைப் பதிதன்னில்
நிதமும் உறைந்து நேசர்க்கே
உலையா இன்பப் பெருவாழ்வை
யுதவும் ஞான பண்டிதனே! 48.

ஞானந் தேடி வாருநறையும்
நல்லை வளருங் குமரேசன்
வானம் மதியும் நதிகடலும்
மற்று முள்ள யாவையுமே
தானாய் நிற்கும் தன்மையுள
தண்டா யுதபா ணியனாகி
ஈனப் பிறவி எடுத்தேனை
எளிதே யாண்டு கொண்டானே! 49.

கொள்கை சற்றும் இல்லேனைக்
கொடியோர் கூட்டங் கொள்வேனைத்
தள்ளும் புயலில் தத்தளித்துத்
தடுமா றெய்தித் தவிப்பேனை
முள்ளாம் வாழ்வுப் போர்வையதில்
முனைந்து கிடந்தே உழல்வேனைப்
பள்ள வயல்சூழ் நல்லையெனும்
பதிவாழ் பரமன் ஏற்றானே! 50.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றான் அடிக்கே எந்தைபிரான்
எழிலார் மாட நல்லூரில்
தோற்றாத் துணையாய் வீற்றிருந்து
தொல்லைப் பிறவி வேதனையை
ஆற்றா தடியார் அழுகின்ற
அவலம் போக்கும் அன்புருவைப்
போற்றா நிற்பேன் அவன்பாதப்
பொலிவு கண்டே வாழ்வேனே! 51.

வாழ்த்த வாயும் நினைத்தற்கே
மடைமை நெஞ்சும் நமக்கீந்து
பாழ்த்த பிறவித் துயர்கெடுக்கப்
பழமாய் மலைமேல் நின்றகுகன்
சூழ்த்த வண்டு முரல்கின்ற
சோலை நல்லைப் பதிகொண்டு
தாழ்த்து கின்றான் நமையென்றால்
தன்னைத் தொழவென் றுணரோமோ?

உணரும் பேறு சற்றேனும்
உண்டா காத நாயேனை
இணங்க வைத்துத் தன்னடியே
இழுத்துக் கொண்ட முருகேசன்
புணர்ந்தே வள்ளி குஞ்சரியைப்
புல்லி மகிழ்ந்து நல்லையிலே
வணங்க வென்றே வாழ்கின்றான்
வாரீர் உலக மாந்தர்களே! 53.

மாந்தர் காளிங் கேவம்மின்
மார்க்கம் ஒன்று சொல்கின்றேன்
ஏந்தும் சேவற் கொடியுடையான்
எழிலார் கலியின் யுகவரதன்
சாந்தும் வேம்பும் கற்பகமாந்
தருக்கள் நிறைந்த நல்லூரின்
வேந்தன் காலில் வீழுங்கள்
வியந்து நிற்பீர் நிச்சயமே! 54.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சய மான தலைவன்பதமே
நீரிற் குமிழி நம்வாழ்க்கை
எச்சம யத்தும் அவன்புகழை
ஏத்தல் ஒன்றே புகலளிக்கும்
நச்சி நிற்பார் கலிதீர்க்கும்
நல்லைக் குமர னைநினைந்தே
உச்சி மீது கைவைப்பீர்
உயர்வீர் வானோர் ஆவீரே! 55.

ஆவதும் அழிவும் நங்கையில்
ஆண்டவ னெதுவும் செய்வதில்லை
போவதும் வரவும் இல்லாத
புண்ணியக் கந்தன் திருநாமம்
நாவது கொண்டே ஏத்திடுவார்
நயக்கும் நல்லைப் பதிமறந்து
சாவ தொன்றே கொள்கையதாய்ச்
சஞ்சலங் கொண்டோம் சத்தியமே.

சத்திய மான பொருளவனே
சாரோம் வேறு கொள்கையென
நித்தியம் நல்லை வருபவர்கள்
நேராய் அவனை அணைபவர்கள்
வித்தியா னந்தம் வேறுளவாம்
விதவிதப் பேறு தம்முடனே
முத்தியும் பெற்றே ஈசனருள்
முழுகி யின்பம் பெறுவாரே. 57.

பெற்றோம் பேரா னந்தமயப்
பெருவாழ் வெல்லாம் அடியவர்க்கு
நற்றா யாகி நம்மையெலாம்
நாளும் சாக்கும் நல்லைவளர்
பொற்றா மரையின் திருவடியில்
புரண்டும் உருண்டும் ஒருபொழுது
கற்றா வாகக் கதறினமேல்
காண்டல் அவனை எளிதாமே! 58.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளிதில் இன்பம் எய்தற்கே
இலகு வழியொன் றுண்டுலகே
எளியன் அடியார்க் கம்பலவன்
இசைந்தே யளித்த இளங்குமரன்
அளிசூழ் பூங்கா நிறைகின்ற
அழகா புரியை நிகர்நல்லைத்
தளியில் வதிந்து வளர்கின்றான்
தாழ்வாய் சென்னி சஞ்சலமேன்? 59.

சலமே யில்லாக் கலிவரதன்
சண்முக நாதன் உறைகின்ற
நலமே கருதும் நல்லவர்கள்
நாடும் நல்லைப் பதிதனையே
வலமே வந்தால் என்றென்றும்
வாழ்வே யுண்டாம் நாமொன்றும்
இலமே எனவே ஏங்கிடுதல்
இனியும் தேவைப் படுமாமோ? 60.

படுமா மரமாய் நின்றொளித்த
பாவிச் சூரன் முனைப்பதனைத்
தொடுமா சரத்தால் தொலைத்தளித்த
தூயோன் நீல மாமயிலோன்
நடுமா துணைகள் தருங்கனியை
நாளும் விரும்பும் நல்லைவளர்
சுடுநீ றணியும் சுவாமியின்தாள்
தொலையாப் பிணிக்கு மருந்தாமே. 61.

மருந்தே யாகி நோய்க்கெல்லாம்
மாயை மயக்கில் உழல்வோர்தம்
அருந்தா யாகி அமைகின்ற
அத்தன் முருகன் என்றென்றும்
அருந்தேன் மலரில் அருந்தற்காய்
அளிகள் கீதம் இசைக்கின்ற
விருந்தாம் சோலை நல்லூரில்
விரும்பி வாழ்வான் துணைநிற்பான் 62.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணையாய் விழிக்கே அவனுடைய
சோட்டுப் பதங்கள் துலங்கிடநற்
பிணையாய் நிற்பன் யமன்நம்மைப்
பிணிக்கும் போதவ் வாறிருதோள்
புணையாய் நிற்கும் நல்லைநகர்ப்
புதுமைக் கோயில் வலம்வந்தால்
அணைவா நங்கள் உள்ளத்தே
அறியா தேனோ மயங்குகிறீர்! 63.

மயங்கும் மயிலை வாகனமாய்
வரித்துக் கொண்ட வடிவேலன்
தயங்கும் நம்போற் சிறியர்க்காய்த்
தலமாய்க் கொண்ட நல்லைநகர்
வயங்கும் வானை முட்டுகின்ற
வளமார் கோயில் நினைந்தாலே
பயங்கள் யாவும் பறந்தோடும்
பத்தி செய்வோம் வருவீரே! 64.

வருவாய் தேடி ஓடுவதில்
வாழ்நா ளெல்லாம் பாழாகி
அருநோய்க் காளாய் மாள்வதிலே
அடையும் பயனை உணர்வீரோ?
பெருமா மதில்சூழ் நல்லூரின்
பெருமா மணியின் தாள்வீழ்ந்தாற்
குருவாய் வருவான் நம்மிதயக்
குகையுள் வாழ்வான் குமரையன்! 65.

குமரன் வேலன் அசுரர்குலம்
கொடிபோ லறுத்த ஆண்பிள்ளை
விமலன் வள்ளி தெய்வானை
மேனி தழுவும் விண்ணவர்கோன்
அமருங் கோயில் நல்லூரை
அடியாய்க் கொண்டால் நம்முடைய
பிமரம் தீரும் நமைவருத்தும்
பிறவிப் பிணியும் தொலையும்மே! 66.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலையாத் துன்ப நோய்தீரச்
சூதுக் குணங்கள் போயகல
நிலையாய் வாழ்வு பெற்றுவிட
நினைப்பா யாகில் இதனைக்கேள்!
கலைவாழ் மாட வீதிகள்சூழ்
கவினுர் நல்லைப் பதிசென்ருல்
மலைவாழ் முருகன் உன்னுடைய
மனத்தே என்றும் நிறைவானே! 67.

நிறைந்தே யன்பு மதுவொழுகும்
நிமிர்ந்த ஆறு முகமலரில்
உறைந்தே வண்டும் அதுபருகும்
உண்மை யில்லா மனத்தார்க்கு
மறைந்தே நிற்கும் ஆனுலும்
மகிமை நல்லை வளர்முருகன்
கறந்தே தருவன் நற்போதம்
கருத்தோ டவனை நினைத்தாலே! 68.

நினைத்தால் வருவன் ஒருநிமிடம்
நீயேன் வீணே வருந்துகிருய்?
அனைத்தும் அள்ளித் தருகின்ற
ஆறு முகத்தான் அடிக்கமலம்
மனத்தால் பற்று வார்உறையும்
மணம்சேர் நல்லூர் வாழிறைவன்
இனத்தால் தமிழர் ஆகியநம்
இன்பப் புதையல் ஆவானே! 69.

புதையல் பொன்னைப் பெறுதற்குப்
பொழுதை நாளும் போக்கும்நீர்
இதய வாசல் திறந்திருக்க
இசைவே யில்லா தொழிகின்றீர்
உதயம் செய்தான் உலகத்தார்
உய்தி பெறுதற் கெனநல்லைக்
கதவைத் தேடி நில்லுங்கள்!
கதியை நாடிச் செல்லுங்கள்! 70.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வந் தேடி அலுத்திட்ட
சிந்தை தெளியா நந்தமக்கு
வெல்லும் வழியே கூறுகின்ற
வேலா யுதமே துணைசெய்யும்
அல்லும் பகலும் அருள் செய்தே
ஆளாய்க் கொள்ள நல்லூரில்
கொல்லும் வினையை நோக்காகக்
கொண்ட குமரன் தாள்மறவோம். 71.

மறத்தின் கருணை வழியாக
மாயச் சூரின் உரம்பிளந்த
திறத்தின் நாறின் ஒருபங்கு
தீயேன் பொருட்டுச் செலுத்துநலைப்
புறத்தும் அகத்தும் தூயவராம்
புனிதர் வாழும் நல்லூரைக்
குறித்துக் கோயில் கொண்டபிரான்
குறியீர் கருத்திற் கொள்ளீரோ? 72.

கொண்டும் கொடுத்தும் இறைவற்கே
குடியாய் அடியாய் ஆட்பட்டால்
மீண்டும் மனதைப் போக்கிஅவன்
மீளா அடிமை ஆக்கிடுவான்
பண்டு தொட்டே நல்லவர்கள்
பாடிப் பரவும் நல்லூரைக்
கண்டு பணிவோம் வாருங்கள்
களியாம் பெருவாழ் வெய்துங்கள்! 73.

எய்தே அம்பால் வீழ்த்தி நின்ற
ஏனத் தானைச் சுவைத்தற்குப்
பெய்தே அன்பால் தந்துநின்ற
பெரியோர்க் கருள் செய் பெம்மானின்
வெய்த விழியில் தோன்றியநல்
வேலா நல்லைப் பதியரசே
கொய்யும் துன்பத் துயர்துடைக்கக்
கூறுய் தடைகள் உளவாமோ? 74.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளதாம் பொருளும் உனையல்லால்
உண்டோ மற்றிவ் வுலகினிலே
வளமார் பதியாம் நல்லைநகர்
வள்ளால் புவிக்கு நற் நருவே
களவாய்க் குறத்தி மணங்கொண்ட
கந்தா என்னை மணங்கொள்ள
இளகா தோநின் இதயமலர்
இனியே தெனக்கு மீட்சிகொலோ? 75.

மீண்டும் மீண்டும் பிறந்திறக்கும்
மிடிமை வேண்டாம் பவக்கடலைத்
தாண்டும் படிக்குன் அருள்செய்யத்
தருணம் இதுவே தாயகனே!
யாண்டும் அடியார் சூழ்கின்ற
யாழ்ப்பாணத்து நல்லையிலே
வேண்டித் தொழுவார் வினைதீர்க்கும்
வேல்கைக் கொள்ளும் விண்ணமுதே 76

விண்ணோர் வேந்தே விறல்மிக்க
வீரா சூரா சூரர்க்கும்
கண்ணாய் நம்மைக் காப்பானே!
கார்த்தி கேயா! கடுகளவும்
நண்ணார் நெஞ்சில் நண்ணுத
நல்லைக் கந்தா என்னுள்ளம்
புண்ணாய்ப் போவ துன்னுள்ளமோ
போக்கும் வரவும் இல்லானே! 77

இல்லை யென்னும் தொல்லைகளே
இல்லா தாக்கும் சற்குருவே
எல்லை யற்ற பொருள்முடிவே
எமனின் காலா! எழிலுடனே
நல்லை நகரில் எழுந்தருளி
நாடி னோர்க்கே அருள்செய்ய
வல்லை இன்னல் உடையேனின்
வருத்தம் என்றோ தீர்ப்பதுவே! 78



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்தம் ஆட நாமெல்லாம்
தீர்த்தம் வினையென் றிருந்திடுவோர்
பார்த்தால் உன்றன் அருள்வடிவைப்
பாரம் யாவும் குறைந்திடுவோர்
யார்க்கும் அருளக் காத்திருக்கும்
யாழின் நல்லைப் பதிதனிலே
மூர்த்தி சிறிதாய் ஆனாலும்
கீர்த்தி மிக்க முதலோனே! 79.

முதலும் முடிவும் அற்றபிரான்
முருகன் நல்லை நகரிதனைப்
பதியாய் ஏற்றான் நம்மிதயப்
பாசாங் கெல்லாம் பொடிபடவே
எதிலும் பொய்ம்மைக் கலப்பின்றி
இனிதா யவனைத் தொழுவார்கள்
விதியை வெல்வர் வெற்றிதரும்
மதியால் விண்ணை ஆளுவரே! 80.

ஆட்சிப் பலங்கொள் சூரனிடம்
அடிமைப் பட்ட இமையவர்க்கு
மீட்சி தருதல் நோக்கமதாய்
வேல்கைக் கொண்ட நங்கடவுள்
காட்சிப் பொருளாய் நல்லூரின்
கந்த னானான் நம்மவர்க்கும்
மாட்சி தருதற் காகவென்றே!
மனங்கொள் ளாயம் போனேம்நாம். 81.

போன சென்மத் தொடர்புகளின்
பொருத்து நம்மை வருத்துவதை
ஏனோ இன்னும் அறியாமல்
இரங்கி நிற்போம் நல்லூரில்
வானை எட்டும் கோபுரத்துள்
வளரும் குறமா தொருபாகன்
தானே இதற்கு மருந்தாவன்
தவறா தவனை யருந்திடுவோம்! 82.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருந்தா யான அம்பிகையும்
அளித்த முலையால் புவனங்கள்
திருந்த வென்றே திருமுருகன்
தீம்பால் பருகி உயக்கொண்டான்
வருந்தித் தமது பிறப்பழிப்பார்
வாழ்நல் லய்யன் வீதியிலே
இருந்தால் தீரா தோதுன்பம்?
இனியும் உண்டோ சந்தேகம்? 83.

சந்தே கங்கொள் ளாய்மனமே!
சாவுக் கிடமாய் வாழாதே
நந்தே கத்தைக் காலனவன்
நாளை வெட்டி வீழ்த்திடுவான்
தந்தே கத்தால் குமரற்கே
தவறு தங்கே பணிசெய்வார்
வந்தே கூடும் நல்லூரை
யுவந்தே சேர்வாய் வழிதெரியும்! 84.

வழியே தெரியா தலைகின்ற
வஞ்ச நெஞ்சே உன்னுடைய
விழியும் குருடோ? மயிலேறும்
வேலன் தன்னை யெண்ணுயோ?
மொழியால் தமிழின் தெய்வமவன்!
மோதகக் கையான் தம்பியவன்
பொழில்சூழ் நல்லைப் பெருங்கோயில்
போனல் அவனைப் பெறலாமே! 85.

பெறலாம் நலங்கள் பெரிதாகப்
பேய்த்த மனமே வல்வினைநோய்
அறலாம்! வேதம் ஓவாதே
அறையும் நல்லைப் பதிதன்னில்
தெறலார் சூரின் குலமறுத்த
செவ்வேற் பெருமான் குடிகொண்டான்
இறவா நிலைமை ஈந்திடுவான்
ஈசன் அவற்கே ஆளாவாய்! 86.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவாய் கந்தற் கடிப்பட்டு
அருநோய் கெடவெண் ணீறணிவாய்
பூவாய் பறித்தே அவற்கிடுவாய்!
புதுவாழ் வதனைப் பெற்றவர்கள்
நாவாய் ஆகக் கருதுகின்ற
நல்லைக் கந்தன் புகழ்பாட
நீவா மனமே அவன்காலில்
நித்தம் வீழ்வாய்! கும்பிடுவாய்! 87.

கும்பிக் கிரையைத் தேடுவதில்
குழம்பி அலைந்து மேன்மேலும்
வெம்பித் திரிதல் வேண்டாமே
வேற்கை கொண்டே அருள்செய்யத்
தும்பிக் கையான் சோதரனும்
தூயோன் கந்தன் வாழ்கின்றான்
நம்பி வருவாய் நல்லூர்க்கே
நாள்கள் இல்லை! இதுவே மெய்! 88.

மெய்யாம் பாதம் தலைக்கணிவோர்
மேன்மை யடையும் நல்லூரின்
அய்யன் வசமே எம்பொறுப்பை
அன்போ டளித்து விட்டாலே
நய்யப் பண்ணி நந்நெஞ்சை
நாளும் உடலைப் பதஞ்செய்தே
உய்யக் கொள்வான் என்பதிலே
உனக்குத் திருத்தி வாராதோ? 89.

வாரா திருக்கும் போலிகட்கு
வருந்தும் அலங்கா ரக்கந்தன்
பேரா யிரமும் படைத்திந்தப்
பெரிய தலமாம் நல்லூரில்
நாராய்க் கிழியும் நம்மவர்க்காய்
நயந்து வந்தே உறைகின்றான்
நீராய் உருகி நில்லாமோ
நிமலன் தாளில் வீழோமோ? 90.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்ஓம் சக்தி வேலென்றே
உரத்துக் கூறும் திறலுடையோர்
நாம்வீண் துயரம் கொளலாமோ?
நல்லை வளரும் வேற்பெருமான்
தாம்தீம் என்ன நடமாடும்
தருக்கு மிகுந்த மயிலினிலே
ஓம்காம் வேதப் புடைசூழ
ஒளியாய் வீதி வலம்வந்தான்! 91.

வலத்தே வள்ளிக் குறத்தியொடு
மருவும் தேவ குஞ்சரியை
மலத்தோர் வாழ இடப்புறத்து
மகிழ்ந்தே அணைத்தி னருள்செய்ய
நிலத்தே சிறந்த நல்லூரின்
தலத்தே இருக்கும் பெருமானை
உளத்தே கொள்வார் இருமையினும்
உயர்ந்த இன்பம் அடைவாரே! 92.

அடைமின் மனனே நல்லூரான்
அருள்சேர் வாசல் வழியாகத்
தடைகள் ஒன்றும் அங்கில்லை!
தாமதம் வேண்டாம்!தயவுநிறை
விடைசேர் இறைவன் தந்துதவும்
விமலன் வீரன் இருமகளிர்
புடைசூழ் பெருமான் வருகின்றான்
புள்ளி மயிலிற் புண்ணியனே! 33.

புண்ணிய மென்ன செய்தீரோ
பூதலத் தீரே அவன்சரணே
தண்ணிழ லென்று கொள்வதற்கும்
தாரக நாமம் கூறுதற்கும்?
பண்ணிசை கேட்கும் நல்லூரைப்
பரவிக் காவடி தோள்கொண்டால்
எண்ணில் அடங்காப் பேறுகள்
எளிதிற் பெறுவீர்! விரைவீரே! 94.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைந்து வந்து நம்முடைய
விசனம் யாவும் வீட்டுதற்காய்
நிறைந்த அருளின் கோலமொடு
நெடிய மாலின் திருமருகன்
கரைந்தே அழுவார் தினங்கூடும்
காட்சி நிறைந்த நல்லூரின்
சிறந்த வீதி வருகின்றான்
சென்று தொழுவீர் அவன்கழலே! 95

கழலைப் பற்றி நின்றாலே
கருகும் துயரம்! அதைமறந்து
விழலைப் பற்றி நம்வாழ்வை
வீணே கழித்து வியர்க்கின்றோம்
அழலைப் பற்றி யவன்மைந்தன்
அழகோ டுறையும் நல்லூராம்
நிழலைப் பற்றி நிற்பாயேல்
நிமிடந் தோறும் நிம்மதியே 96.

நிம்மதி வேண்டி யலைகின்ற
நெஞ்சே! வந்து நல்லூரின்
விண்மதி முட்டுங் கோபுரத்துள்
வீற்றே யிருக்கும் பெருமானை
நன்மதி யோடு சேவித்தால்
நாடிய அனைத்துங் கைகூடும்
என்மதி கேளாய் இறைவன்தாள்
என்றும் பற்று! குறைவின்றே! 97.

இன்றே எங்கள் ஆவியையும்
இளைத்து நொந்த உடலதையும்
வென்றே பெற்ற உடைமையையும்
வேலன் தாளில் வைத்திட்டால்
குன்றே அனையான் நல்லூரைக்
கோயில் கொண்ட ஞானத்தின்
கன்றே எம்மைக் கைதூக்கி
நன்றே கரையிற் சேர்த்திடுமே! .98



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையெங் கென்று தெரியாமல்
கடலில் புயலில் அகப்பட்டுத்
திரையொன் றதனல் எற்றுண்டு
சிதைந்து போகும் மனிதர்நாம்
தரையில் உயர்ந்த தலமாகும்
தார்மார் பனுறை நல்லூரை
விரைவிற் சேர்வோம் அதனலே
விடுதி பெறுதல் நிசமாமே! 99.

நிசமே சொல்வேன் நன்னெஞ்சே
நீறும் அக்கம் ஆறெழுத்தும்
வசமே கொண்டால் ஈடிவரும்
வடிவேற் பெருமான் நமைநோக்கி
கறமே முகமாய்க் கொண்ட பிரான்
கையில் வளருங் கனியாவான்
அஜவா கனைய் நல்லூரான்
அருளை அள்ளித் தருவானே! 100.

## பயன்

ஆறு முகங்கள் கொண்ட பிரான்
அழகாய் நல்லை வளர்முருகன்
மாறு முகங்கள் நீக்கி யெம்பால்
வளரும் வினைகள் போக்குபவன்
நாறும் மலரோன் புகழ்கூறும்
நல்லைக் கந்தர் அந்தாதி
கூறும் அன்பர் யாவருமே
குன்ற இன்பம் எய்துவரே.

ஓம் சரவணபவ. சுபமங்களம்!

கண்ணன் - நல்லூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org